முருகப்பெருமான் துணை

**மகான் நின்றசீர்நெடுமாற நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**04.11.2023**, சனிக்கிழமை

1. வையக வறுமை விரட்டிட
வள்ளலாய் வந்த அரங்கனே
தயவாக மக்களுக்கு அருளி
தன்னிகரில்லாத ஞானம் அருளுகின்ற
2. அருளுகின்ற ஆறுமுக ஞானியே
அகிலமதில் உன் பெருமை கூறி
அருளுவேன் சோபகிருது துலை திங்கள்
அச்சமற மூவாறு திகதி காரி வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 18 ம் நாள், 04.11.2023, சனிக்கிழமை)
3. வாரமதில் அறிவுரை ஆசிதனை
வழங்குவேன் நின்றசீர்நெடுமாற நாயனாரும்
சோரமிலா ஞானஉலகம் அமைய
சுத்தநெறிக்கு மக்களே வருக என உரைப்பேன்
4. உரைக்கவே அரங்கமகானும்
உயிர்கொலை நீக்கி வாழ
மறையாகத் தந்த சன்மார்க்க
மகான்களின் வழி ஏற்று வாரீர்
5. வாரீர் என அழைப்புத்தர
வணங்கி மக்கள் வழிமொழிந்து
பெருமைபட ஏற்றுத் தொடர
பெரும் பாவங்கள் சூழா வாழ்வாக
6. ஆகவே நடைமுறை கூடி
அறிவிப்பேன் இவை பிறவியில்
வகைபட மேலவர்கள் ஆசி
வல்லமைபட வந்தனுகி

7. அனுகியே ஆத்ம ஞானபலம்
ஆற்றல்பட பெருகி நின்று
ஞானவான்கள் ஆவீர் என்பேன்
நம்பகமுற சரணாகதி காண
8. காணவே குருவருள் பலம்
கண்டுரைக்க பெருந்துணையாகி
ஆணவ மலங்கள் விலகி
அமைதி பாதுகாப்புப் பெருகி
9. பெருகியே எங்கும் எதிலும்
புண்ணிய நோக்கம் கூடி
முருகப் பெருமான் இறைகாட்சி
முழுமைதரும் வண்ணம் கிட்ட
10. கிட்ட ஆசி பெற்றவர்களாக
குருபலம் கொண்டவர்களாக
தட்டாமல் தருமம் மிக செய்து
தரணிமாற்றும் தருமவான்களாக
11. ஆகவே மாற்றம் கண்டு
அற்புதம் பல படைப்பர்
மகான்களாகி ஞான ஆட்சிதருவர்
மொழிந்திட்ட அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—